பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 மாசி 11 ரபி-ஆகி 6 இதழ் 13
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-2-80

RECEIVED 1980-2-23 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS

தரத்தில் நிகரற்ற
மான், முயல்
விளக்கு, வரிக்குதிரை
செவனமார்க்
ஓடுகளுக்கு

மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

## டி. ஐ. ஜி. விஜயம்

(மன்னர்)
வடமாநில பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. மகேந்திரன் மன்னருக்கு விஜயம் செய்திருந்தார். அவர் தலைமையில் மன்னரில் நடைபெற்ற மாநாடொன்றில் கள்ளக் கடத்தல், போதைப்பொருட்களை கடத்தல் சட்டவிரோதகுடியேற்றம் போன்றவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது.

# மா, பாண், அரிசி விலைகளும்

# அதிகரிப்பு!

மா - ரூ. 2-37 இ. அரிசி -- ரூ. 4-34

பாண் -- ரூ. 2-05 உ. அரிசி -- ரூ. 3-56

(கொழும்பு)

**மா, பாண், அரிசி ஆகியவற்றின் விலையையும் அரசாங்கம் அதிகரித்துள்ளது.**

**ஒரு றுத்தல் மாவின் விலை 2 ரூபா 37 சதமாகவும், ஒரு றுத்தல் பாணின் விலை 2 ரூபா 05 சதமாகவும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி ஒரு கொத்து 4 ரூபா 34 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒரு றுத்தல் அரிசி 2 ரூபா 17 சதமாக இருக்கும்.**

இவ்விலை அதிகரிப்பை உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய விலைகள் இன்று முதல் அமுலுக்கு வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### உள்ளூர் அரிசி விலையில் மாற்றமில்லை

உள்ளூர் அரிசி விலையில் மாற்றம் இருக்காது என்றும் உள்ளூர் அரிசி தொடர்ந்தும் ஒரு கொத்து 3 ரூபா 56 சதமாகவே இருக்கும் என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம-இ)

## பொருளாதாரக்கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டும்

### அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கையை மீளாய்வு செய்துகொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் வற்புறுத்தினர்.

நேற்றுமுன்தினம் நிதிதிட்டமிடல் பதில் அமைச்சர் ஜனுப் நைனு மரிக்கார் சமர்ப்பித்திருந்த சில பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பான அறிக்கைமீது திரு. அமிர்தலிங்கம் சபையில் உரைநிகழ்த்தினு.

நேற்று முன்தினம் திரு. அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டதின்பேரில் நேற்றுக் காலை மேற்படி அறிக்கைமீது சபையில் விவாதம் நடத்துவதற்கு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா ஒப்புதல் வழங்கியிருந்தார்.

நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அரசின் பொருளாதாரக் கொள்கையைக் கடுமையாக விவாதித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## அரிசி, மா பாணின் விலைகள் இனி இவ்வாண்டில் அதிகரிக்காது

### எவரும் இறக்குமதி செய்யலாம் என்கிறார் உணவு அமைச்சர்

(கொழும்பு)

அரிசி, மா, பாண் ஆகியவற்றின்விலைகள் இவ்வாண்டு முடிவடையும்வரை மேலும் அதிகரிக்கமாட்டாது என்றும் மா, அரிசி ஆகியவற்றை எவரும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யலாமென்றும் உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் கூறினர்.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது அமைச்சர் விடுத்த அறிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:

மா, அரிசி ஆகியவற்றை எதுவித லாபமோ நஷ்டமோ இன்றி விற்பனை செய்வதென்று அரசு தீர்மானித்துள்ளது.

இவற்றுக்கு மான்யம் வழங்கினல் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை எல்லாம் கைவிடவேண்டியநிலையே ஏற்படும்.

இப்பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து விநியோகிக்க அரசு சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. கொள்வனவு விலைகுறையும்போது அதனல் ஏற்படும் நன்மைகள் பொதுமக்களுக்கே வழங்கப்படும். (ம-இ)

## ரியூட்டரிக்குசென்றமாணவி மறுநாள் பிணமாக மீட்பு!

### சுடலைக்கருகில் தலை புதைக்கப்பட்டிருந்ததாம்

(புலோலி)

ரியூட்டரிக்குச் சென்ற 15 வயது மாணவி ஒருவர் மறுநாள் காலை சுடலை ஒன்றுக்கு அண்மையில் உள்ள பற்றைக்கருகில் அரைநிர்வாணக் கோலத்துடன் தலைபுதைக்கப்பட்ட நிலையில் உயிரற்ற சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை - வராத்துப்பளை கிராமத்தில் ஆணைவிழுந்தான் சுடலைக்கு அருகிலேயே பொலிகண்டியைச் சேர்ந்த இராமச்சந்திரன் கமலா என்ற அந்த மாணவியின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை ரியூட்டரிக்குச் சென்ற இம் மாணவியின் சடலத்தை நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிசார் மீட்டனர்.

யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் நிஸாம் பருத்

(8-ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு சூத்திர முறைகளினுல்........ ........ தயாரிக்கப்பட்டவை
றொபின் சோப்வகைகள்




வெண்மைக்கு வெண்மை தருபவை




தயாரிப்பாளர்:
பெனின்சுலா சவர்க்கார தொழிலகம்
9, கண்டி வீதி, நாவற்குழி.



நகைப் பிரியர்களுக்கோர் நற்செய்தி!
யாழ். நகரில் உங்களுக்கான புதிய நகை நிறுவனம்
எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற லலிதா ஜுவல்லறி
25-2-1980 திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது என்பதை அனைவர்க்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.
உங்கள் சகல நகைத் தேர்வுகளுக்கும் நினைவில் நிலைக்கப்போகும் உன்னத நிறுவனம்.

லலிதா ஜுவல்லறி
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து)
4999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சன்யோ Cassette Recorder AC / DC. ஆறு பற்றற்.- மயில்வாகனம், அருமை உல லப், சுதுமலை வடக்கு, நுணு வில் ரோட். மானி
(5015)

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிர பல ஸ்தாபனம் ஒன்றிற்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் கணக்கு எழுதுவதில் நல்கு தேர்ச்சியுள்ள கணக்கப்பிள்ளை தேவை வியாபாரக் கணக்கு கள் எழுதுவதில் குறைந்தது ஐந்து வருட அனுபவமும் நல்ல ஒழுக்கமும் இருத்தல் வேண்டும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5019 C/o ழநாடு, யாழ்ப்பாணம். 5019


# "குற்றச் செயல்களில் இளைஞர்களே அதிகமாக ஈடுபடுகின்றனர்"

## பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவுக் கருத்தரங்கில் தகவல்

(புலோலி)

"யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இளைஞர்களே குற்றச் செயல்களில் அதிகமாக ஈடுபடுகின்றனர். பொதுமக்கள் பொலிசாருக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கள் மூலம் இக்குற்றச் செயல்களை ஒழிக்கமுடியும். இதனைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் பொலிசாருக்கு போதிய ஒத்துழைப்பை வழங்கினால் குற்றச் செயகல்ளை விரைவாகவே ஒழித்து, ஒழுங்கு, அமைதி, கட்டுப்பாடு என்பனவற்றை நிலைநிறுத்தமுடியும்".

இவ்வாறு பருத்தித்துறைப் பொலிசாரினால் ஒழுங்குசெய்யப்பட்ட பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்பிரண்டன் திரு. விஜயக்கோன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரா குணரத்தின தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உதவிப்பொலிஸ்சுப்பிரிண்டன் திரு. விஜயக்கோன் மேலும் கூறியதாவது:

"பொதுமக்கள் தமக்குள்ள இன்னல்களைப் பொலிசாருக்குத் தெரிவித்து அதற்குத் தகுந்த பரிகாரம் காணுவதற்கு அஞ்சத் தேவையில்லை. பொதுமக்களின் நன்மைகருதி நாட்டில் ஒழுங்கு, கட்டுப்பாடு அமைதி என்பனவற்றை நிலவச் செய்வதே பொலிசாரின் முக்கியகடமையாகும். பொதுமக்கள் பொலிசாருக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே பொலிசார் கடமையைச் சிறப்பாகச் செய்ய முடியும். இந்நிலையில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவை வளர்த்துக் கொள்வது மிகமுக்கியம் என்பதனாலேயே பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக்கான நடவடிக்கைகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

"கிராமிய மக்களுக்கும் பொலிசாருக்குமிடையேநல்லுறவை வளர்த்து கிராமப்பகுதிகளில் குற்றச்செயல்களை ஒழிப்பதற்காக கிராமங்கள்தோறும் கிராமஅபிவிருத்திச் சங்கங்களினதும், ஏனைய நிறுவனங்களினதும் உதவியுடன் கிராமிய இளைஞர்களைக்கொண்ட விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு சந்திரா குணரத்தின இப்பகுதிகளில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையே நல்லுறவை வளர்த்து குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டக்கூடியது" என்றார்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சந்திரா குணரத்தின உரைபாற்றுகையில் கூறியதாவது:

பருத்தித்துறைப்பொலிஸ் பகுதியில் வாழும் மக்கள் குற்றச்செயல்களைத் தடுப்பதற்குப் பொலிசாருக்கு ஒத்துழைப்பு புரிந்து வருகின்றனர். அண்மையில் வாணக்குடியிருப்பு என்னும் இடத்தில் நடைபெற்ற தாலிக் கொடித்திருட்டு சம்பவத்திற்குப் பொதுமக்கள் வழங்கிய

(7-ம் பக்கம் பார்க்க)


## வளர்ச்சிகாண் தொழில் நுட்பம் கண்காட்சியும் வழிகாட்டலும்




* கைத்தொழில் அபிவிருத்திச் சபை
* வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்
* யாழ்ப்பாணக் கல்லூரி

ஆகியோர் ஒழுங்கு செய்கின்றனர்

**3 மார்ச் '80 - 8 மார்ச் '80**

வரை

**யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.** 5043

## முருங்கன் களிமண் புலத்தில் இருந்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு

### தினசரி 200 தொன் களிமண் ஏற்றிக்கொண்டு வந்து தொழிற்சாலையில் விநியோகம் செய்வதற்கான விலைகோரல் மனுக்கள்

மேற்காணும் சேவையை மேற்கொள்வதற்கு கீழ்க் காணும் நியதிகள் நிபந்தனைகளின்படி காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை முகாமையாளரால் அரக்குமுத்திரை இடப்பட்ட விலைகோரல் மனுக்கள் கோரப்படுகின்றன.

அ. மேற்காணும் சேவையை மேற்கொள்ள விருப்பம் உடையவர்கள் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை முகாமையாளருக்கு விண்ணப்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணம் ரூபா 50/- உடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஆ. விலைகோரல் மனுப்படிவங்கள் இம்மாதம் 27ம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 03ம் திகதி நண்பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும்.

இ. 1980 மார்ச் மாதம் 10ம் திகதி 2மணிவரை மட்டுமே விலைகோரல் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப் படும்.

தொழிற்சாலை முகாமையாளர்.

5041

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பிள்ளை ஆறுமுகம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர் மல்லாகத்தைச் சேர்ந்த கந்தப்பிள்ளை ஆறுமுகம் கைம்பெண் அமிர்தமலர்.
மனுதார்

மரண சாதன நியாயாதிக்கம்
இல. 52.

எதிராக

ஆறுமுகம் சிறீநடனசோதி - மல்லாகம் தற்போது ஈராக்.
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 15 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப் படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ந் திகதி.

15-2-1980

காரணங் காட்டும் திகதி 23-5-1980 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மூ. நல்லலிங்கம்
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது
செ. இராமலிங்கம்

5013

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

வழ. இல: ஈடு 1883

கந்தையா சபாரத்தினம், உரும்பராய் வடக்கு --வாதி
எதிராக
முருகேசு நாகலிங்கம், உடுவில் கிழக்கு --பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/1883-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றத்தின் கட்டளையின் படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1980-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21-ந் திகதி (21-3-1980) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு முதலும் வட்டியும் ரூபா 5512/50வும் மேலும் ரூபா 3500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வட்டி வீதம் 23-9-1977லிருந்து 11-8-1978 வரைக்கும் அதன்பின் இறுக்கும் வரைக்கும் முழுத் தொகைக்கும் வருடமொன்றுக்கு 9% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 615 60 சதமும் கொடுத்தல்வேண்டும்.

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவில் இறை 'மிதியன் நாயுருவி' நி. ப. (4 3/8) நாலேகாலே யரைக்காலும் வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் தூர்வைப்பங்கும் கிழக்குக் காணியின் வடக்கருகாகக் கிணற்றடிக்குப் போக்குவரவு செய்யும் பாதையுரித்தும், இக்காணியின் தெற்கெல்லையிலிருக்கும் இன்னொரு கிணற்றில் அரைவாசியும் இந்தப் பரப்பு நாலேகாலே யரைக்காலுக்கும் எல்லை கிழக்கு வல்லிபுரம் தம்பாப்பிள்ளைக்கும் பெண் பறுபதத்துக்குமுரியாதனம், வடக்கு முருகேசு கந்தையாவினுதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஒழுங்கையும் வல்லிபுரம் தம்பாப்பிள்ளைக்கும் பெண் பறுபதத்துக்குமுரியாதனமும் இடங்கலுமதைச் சேர்ந்தவைகளும்.

பிரான்சிஸ் எக்ஸ் ஜோக்கிம்
நீதிமன்ற விற்பனையாளரும்,
விலை மதிப்பாளரும்,

"சிவமன்றம்",
தெல்லிப்பளை,
18-2-1980.

5032

## நன்றி நவிலல்



### வ. இராசா

29-1-80இல் காலஞ்சென்ற மலாயன் பென்சனரும், முன்னாள் ஊரெழு- உரும்பிராய்- நீர்வேலிக் கிராமசபைத் தலைவரும், ஊரெழு வீரகத்திப்பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவுமாகிய அன்னாரின் ஈமக்கிரியைகளிற் கலந்துகொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பல வழிகளிலும் எமக்கு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றி.

'ராஜஸ்தான்'
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

திருமதி தங்கம்மா இராசா,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

5002

அருளுரை

## மகராஜ்ஜியின் மகாத்மாக்களுள் ஒருவரும்

பசுபிக் பிராந்திய ஆச்சிரம, அவுஸ்திரேலிய இணைப்பாளருமான

## விக்மாஷ்

இன்று வாழ்ந்துகொண்டிருக்கும்

### சற்குரு - குருமகராஜ்ஜியிடமிருந்து

உங்களுக்கு செய்திகொண்டு வருகிறார்.

பகவான் - இராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு, முகம்மதுநபி மற்றும் அவதார புருஷர்கள் உணர்த்திய அதே ஞான அறிவைக் குருமகராஜ்ஜி உணர்த்தி;

இறைவன்; அமைதி; அன்பு; தெய்வீக உணர்வு; திருப்தி; மோட்சராஜ்யம் ஆகியவற்றை ஒருவன் சாதனை மூலம் தனக்குள் அனுபவிக்கவைக்கிறார்.

"இதற்கு வேண்டியது மனிதப்பிறவி மட்டுமே"

**நாளை 24-2-80 ஞாயிறு மாலை 5-00மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

மகாத்மா அருளுரை நிகழ்த்துவார்

எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(5037) -தெய்வீக ஒளிச் சங்கம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒரு நிர்வாகத்தின் அதிகாரத்துக்குஒருவன் அமையும்போது, தற் சுதந்திரத்தை விலைக்குக் கொடுக்கிறனென்பதே அச் செயலின் கருத்தாகும்.

- மகாத்மாகாந்தி.

## மக்கள் கருத்து

### கொடிகாமம் புதிய வாசிகசாலை

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற மணிவாக்கிற்கொப்ப கச்சாய்க் கிராமசபையின் விசேஷ ஆணையாளரால் கொடிகாமம் நவீன சந்தைக்கான புதிய கட்டிடத்திற்கும், கொடிகாமத்திலொரு வாசிகசாலை அமைப்பதற்கான புதிய கட்டிடத்திற்குமாக நிதி ஒதுக்கீடு செய்திருந்தது எல்லோரும் அறிந்ததே. கொடிகாமம் நவீன சந்தைக்கான புதிய கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஆனல் கொடிகாமம் புதிய வாசிகசாலையமைப்பதற்கான வேலைகள் கட்டிய இடை நடுவிலே நிறுத்தப்பட்டுள்ளன. இதனுல் இந்த வாசிகசாலை எப்போது கட்டி முடிக்கப்படும் என்றும் எப்போது இதன் திறப்பு விழா நடைபெறுமென்றும் பொதுமக்கள் மத்தியில் கேள்விக்குறி எழுந்துள்ளது.

இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி கொடிகாமம் வாசிகசாலைக்கான கட்டிட வேலைகளைத் துரிதப்படுத்தி விரைவில் வாசிகசாலையைப் பொதுமக்கள் பாவனைக்குவிடுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

கே. எஸ். சிங்கராசா
கொடிகாமம்

## தவக்கால நற்சிந்தனை



இறைவனை நம்பு,
என்னை நம்பு.
(அரு. 14/1)

இயேசுவே அப்போஸ்தலர்கள் [கலக்கமடைய காரணங்கள் பல இருந்தன. தம் தலைவர் இல்லாமல் அவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்கள் எவ்வாறு உலகைச் சந்திப்பார்கள்? தத்தம் பணியை முடிப்பார்கள்?

ஆனல் ஆண்டவரே, நீர் அவர்களுக்கு ஊக்கமளித்தீர். ''உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்'' என்றீர்.

என் யேசுவே, உம்மில் நம்பிக்கை வைக்க நீர் தகுதியுடையவர். ஐயங்கள், அச்சங்கள், கலக்கங்கள் என்னைத் தாக்குகின்றன. அவ்வேளையிலும் நாம் உம்மீது நம்பிக்கை வைக்கிறோம். நீரே எம் அடைக்கலம், உறுதியளிக்கும் ஒரே ஊற்று.

வேதனையிலும், பிணியிலும், தோல்வியிலும் நான் முழு நம்பிக்கையும் உம்மேல் வைக்கிறேன். எனது நிகழ்காலத்தையும், எதிர் காலத்தையும் உம் கைகளில் ஒப்படைக்கிறேன். நீரே எம்மை வழி நடத்திச் செல்லும்.

- வண. மேரிபஸ்ரியன் அடிகள்

## "நோயைக் குணப்படுத்த யோகாசனம் சிறந்தது"

### தமிழக யோகாசன ஆசான் ஆண்டியப்பன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''தேகாரோக்கியத்திற்கும், உற்சாகத்திற்கும் மட்டுமல்ல பல்வேறு நோய்களையும் மாற்றுவதற்குச் சிறந்த முறையாக யோகாசனப் பயிற்சிகளைக் கொள்ளவேண்டும். முறையான யோகாசனப் பயிற்சி மூலம் எந்தநோயையும் மாற்றி ஆரோக்கியமாக வாழலாம்''

தமிழக யோகாசனப் பேராசிரியர் திரு. ஆர். ஆண்டியப்பன் யாழ். அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செயலக நலன்புரிச் சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர் ஆண்டியப்பன் யோகாசனங்களைச் செய்துகாட்டியதுடன் அந்த ஆசனங்களொவ்வொன்றினுலும் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துவிளக்கினர்.

யாழ் பல்கலைக் கழகத்துணை வேந்தர்பேராசிரியர் சு. வித்தியானந்தன் இந்நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்து யோகாசனத்தின் மகிமைபற்றிக் குறிப்பிட்டதுடன் அரசாங்க செயலக நலன்புரிச்சங்க உபதலைவா திரு. கு. சபாரத்தினத்தின் இடைவிடாத தூண்டுதலினுல் தானும் தற்பொழுது யோகாசனப்பயிற்சியிலீடுபட்டு வருவதாகவும் கூறினர்.

பேராசிரியர் ஆண்டியப்பன் எந்தெந்த நோய்க்கு எந்த வகையான ஆசனங்களைச் செய்யவேண்டும் என்பதை விளக்கிக்காட்டியதுடன் சற போதைய உணவு பற்றுக் குறை நிலையை மட்டுமல்ல, நோய்த்தடுப்பின் பொருட்டுப் உடலுழைப்பு தவிர்ந்த ஏனைய வகையான உத்தியோகம் முதலிய உழைப்புகளில் ஈடுபட்டிருப்போர் இரு வேளை உணவை உட்கொண்டால்மட்டும்போதுமென்றும், காப்பி, தேநீர் முதலான லாகிரிப் பொருட்கள் வயோதிபப் பராயத்தில் உடம்புக்குப் பெருந்தீங்குவிளைவிக்கும் என்றும் கூறினர்.

உபதலைவர் திரு. கு.சபாரத்தினம் நன்றிகூறினர். (நா)

## அணிசேரா சித்தாந்தம் பாதிக்கப்படுமா?

ஜனதிபதி கார்ட்டர், காங்கிரஸ் சபையில் (பாராளுமன்றம்) நிகழ்த்தியஉரையில்உலக அரங்கில் அமெரிக்காவின் தலைமைப்பாத்திரம் பற்றிவலியுறுத்தினர். இது இன்று ''கார்ட்டர் சித்தாந்தம்'' என்று சர்வதேச அரசியல் அரங்கில் இடம் பிடித்துக் கொண்டது. இது காரணமாக. அடுத்த ஆண்டில் அமெரிக்க ராணுவ பட்ஜட்டுக்கு 2000 கோடி டாலர் மேலதிகமாக ஒதுக்கப்படும். (மொத்தம் 15700 கோடி டாலர்).

ஏற்கனவே வெளிநாடுகளில் அமெரிக்காவுக்கு 400 பாரிய ராணுவத்தளங்கள் உள்ளன. அங்கே சுமார் 5 லட்சம் அமெரிக்கப் படைகள் உள்ளன. ஆப்கானிஸ்தான் 'அபிவிருத்திகள்' காரணமாகவே புதிய சித்தாந்தம் பிரகடனம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது ஆப்கானிஸ்தான் சச்சரவுக்கு முந்தியே உருவானதாகும். 'பிஸ்னஸ் கவுன்ஸிலில்' 1979 டிசம்பர் 12-ம் திகதி ஜனதிபதி கார்ட்டர் நிகழ்த்திய உரையுடன் இது ஜனித்தது. இதற்கு முன்னர் பிரகடனம் செய்யப்பட்ட ''ட்ரூமன் சித்தாந்தம்'', ''மார்ஷல் திட்டம்'' முதலியன இந்த ரகத்தைச் சேர்ந்தவையே. இந்த 'நீதியான போக்கு' காரணமாகவே அமெரிக்கா வியத்தகும் போரில் மாட்டிக்கொண்டது என்று கூறுகின்றனர்.

அமெரிக்காவின் 'உதவி' களைப்பெற்றநாடுகளில் நடப்பு ஆண்டில் மாத்திரம் அந்நாடுகளின் பற்றுக்குறை 5500 கோடி டாலராலும்; ஆபிரிக்க உஷ்ணவலயநாடுகள் 1979ல் 4000 கோடி டாலராகவும் கடனாளியாகியுள்ளன. 1975ல் இத்தொகை 2100கோடிடாலராக மாத்திரம் இருந்தது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 'கார்ட்டர் சித்தாந்தத்தின்' நேரடிபின்னணி ஈரான், ஆப்கானிஸ்தான் என்றல் பொருந்தும்.

சிறியநாடுகள் பெற்றுவிட்ட அணிசேராக் கொள்கைக்கு, இச்சித்தாந்தம் நேர் விரோதமானதென்றும், இதனுல் அணிசேரா சித்தாந்தம் பாதிக்கப்படலாமென்றும் அரசியல்அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

- 'சேது

## 'இரு நாடகம்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. சின்னையா சிவநேசனின் "இரு நாடகங்கள்'' எனும் நூல் முத்தமிழ்வெளியீட்டுக் கழகத்தினரால் மார்ச் மாதம் 9ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படும்.

இக் கூட்டத்திற்கு முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தின் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ். தலைமைதாங்குவார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பொருளியற்றுறைத் தலைவர் திரு. பாலகிருஷ்ணனின் ஆய்வுக் கட்டுரையொன்றும் அவ்விழாவில் வாசிக்கப்பட்டுக் கருத்துப்பரிமாறலும் இடம் பெறும்.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினரின் ஐந்தாது நூல் வெளியீடாக வரவிருப்பது பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளையின் ''கம்பராமாயணக் காட்சிகள்'' என்னும் நூலாகும்.

இந் நூல் வெளியீடுகளுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளைக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருவாளர்கள் க. சொக்கலிங்கம் (சொக்கன்), பி. நடராசன் ஆகியோர் செய்துவருகின்றனர். (நா)

## மகிழ்ச்சி ஆரவாரம்

(மட்டக்களப்பு)

தமிழ்நாடு சட்டசபை கலைக்கப்பட்ட செய்தி வெளியாகியதும் மட்டுநகரில் தி. மு. க. ஆதரவாளர்கள், வெடிகள் கொழுத்தி மகிழ்ந்தனர்.

இது இவ்வாறிருக்க முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் ரசிகர்கள் மத்தியில் கவலையும், ஏக்கமும் குடி கொண்டு இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. தேர்தல் தினம் குறிக்க முன்பே பந்தயமும் பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். (கு)

### வீதியின் அவல நிலை

(கோண்டாவில்)

கொக்குவில் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் அச்சுக்கூட வீதி போக்குவரத்துக்கு தடையாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கடந்த ஆறுமாத காலமாக தெரு அமைக்கவெனப் போடப்பட்ட கற்கள் இன்னும் தெரு அமைக்காமல் சிந்திக் கிடப்பதேயாகும். இந்நிலையில் வெளிச்சம் இல்லாத இப் பாதையில் இரவு நேரத்தில் செல்பவர்கள் பல இன்னல்களுக்கும் ஆளாகின்றனர். இத்தெருவினை விரைவில் அமைக்க ஆவன செய்ய வேண்டுமெனவும் இவ்வீதியால் பயணிப்போர் ஆதங்கத்திற்கு உள்ளாகின்றார்கள். (அ

## அமரர் ஜி. ஜி. தமிழரின் பொதுச்சொத்து

[க. முருகரெட்ணம் ஜே. பி.]

தமிழ்த்தலைவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 3 வது சிரார்த்த தினத்தை இன்று கொண்டாடும் தமிழினம் அவர் எந்த இலட்சியத்துக்காக வாழ்ந்தாரோ அந்தக் குறிக்கோளைப் பூர்த்தி செய்வதற்குத் தமிழினம் ஒரே கொடியின்கீழ் முன்னின்று உழைப்பதே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறாகும்.

அமரர் ஜி. ஜி. நெடுங்காலமாக ஒற்றை ஆட்சியில் நம்பிக்கை வைத்துத் தீவிரமாக உழைத்தவர். பின்பு ஒற்றை ஆட்சிக் கொள்கை தமிழினத்தை அடியோடு குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பதை உணர்ந்து இறப்பதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழர் இந்நாட்டில் தன்மானத்துடன், தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானல் அவர்கள் தங்களைத் தாங்களே ஆளவேண்டும் என்பதை உணர்ந்து பகிரங்கமாய்க் கூறிச் சென்றார்.

அப்பேர்ப்பட்ட தீர்க்கதரிசியின் கனவு நனவாகவேண்டுமாயின் எல்லோரும் குறுகிய மனப்பான்மைகளைக் கைவிட்டு ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும். பலர் பலவிதமான பல்வேறு மேடைகள் அமைத்து அவரைப்பற்றிப் பேசலாம். ஆனல் மறைந்த மதிப்பிற்குரிய தலைவர் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ அல்லது குடும்பத்திற்கோ சொந்தமல்ல. அவர் சிவபதமடைந்தது தொட்டு அவர் ஒரு பொதுச் சொத்து.

சில தினங்களுக்கு முன்பு அமரரின் நினைவுதினம் கொண்டாடப்பட்டதாகப் பத்திரிகை வாயிலாக அறிய முடிந்தது. அந்த அஞ்சலிக் கூட்டத்தில் ஒவ்வொரு பேச்சாளரும் அமரர் அவர்களைப்பற்றியோ அல்லது அவர்களின் அரசியல் அனுபவத்தைப் பற்றியோ பேசாமல் வேறு விஷயங்களைப் பற்றியே பேசியுள்ளார்கள். இதைக் கண்டு நான் மன வேதனை அடைந்தேன்.

அமரர் ஜி. ஜி. தந்தை செல்வா இருவரும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னணியை அன்றுபோல் இன்றும், என்றும் தமிழினம் ஆதரிப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எங்கள் தலைவன், தவப்புதல்வனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## "ஜி.ஜி. முத்திரைவேண்டும்"

### மாநகரசபைக்கு வரும் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

''தமிழ் பேசும் இனத்தின் தன்னிகரற்ற மூத்த தலைவரும் உறங்கிக் கிடந்த தமிழ் இனத்திற்கு முதன் முதல் இன உணர்ச்சியை ஊட்டித் தட்டி எழுப்பிய ஒப்பற்ற தலைவரும், சர்வதேச அரசியல் சட்ட மேதையும் 20-ம் நூற்றுண்டின் தலைசிறந்த அரசியல் தீர்க்கதரிசியுமான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தை கௌரவிக்குமுகமாக அமரரின் ஞாபகார்த்த முத்திரை வெளியிட வேண்டுமென ஜனதிபதியையும், அரசாங்கத்தையும் கோர வேண்டும்'' என்று கோரும் பிரேரணை ஒன்றை யாழ்.மாநகரசபை உறுப்பினர் திரு. இ. மரியாம்பிள்ளை யாழ். மாநகர சபையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

மாநகர சபைக் கூட்டம் இம்மாதம் 27-ம் திகதி புதன் கிழமை யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. ம. அலோசியஸ் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணைகள் வருமாறு:-

''அண்மையில் சுகாதார அமைச்சினுல் தாதிமார் பயிற்சிக்காகத்தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்துமுந்நூறு பேர்களில் பத்து தமிழர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதை அறிந்த இச்சபை அதிர்ச்சி அடைந்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட பத்து பேரில் ஒருவர் கூட இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இல்லாதிருப்பது கவலைக்கிடமளிக்கிறது. தாதிமார் பயிற்சிக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் போது இன மத பாகுபாடற்ற வகையில் திறமைக்கும், தேவைக்கும் முதலிடம் தருமாறு இச்சபை சுகாதார அமைச்சரைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

''யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியசாலைகளுக்கு உடனடியாக 90தொழிலாளர்கள் தேவைப்படுகின்றபொழுதிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இவ்வருடமும் தொழிலாளர்கள் நியமனங்கள் இடம் பெற்றிருக்கையில் யாழ்ப்பாண மாவட்ட வைத்தியசாலைகளுக்கு தொழிலாளர் நியமனங்கள் நடைபெருதிருப்பதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் தேவையையொட்டி வேண்டிய தொகையில் தொழிலாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுவதுடன் தீர்மானத்தின் பிரதிகளை ஜனதிபதி, பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைப்பதெனவும் தீர்மானித்துள்ளது.' (கொ)

### பூட்டப்பட்ட நிலையில் கூட்டுறவுச் சங்கம்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி- நெல்லியடிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகவில் கிளை முகாமையாளர் திடீரெனத் தலைமறைவாகியுள்ளதால் இச் சங்கக் கடை கடந்த ஒரு வார காலமாகப் பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.இது சம்பந்தமாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## அருள்நெறிமன்ற வெள்ளிவிழா; ஞானசம்பந்தன் வருகிறார்


(திருகோணமலை)

திருகோணமலை இளைஞர் அருள்நெறிமன்ற வெள்ளி விழாவும் பூத்தாவது திருமுறை விழாவும் மார்ச்மாதம் 1, 2, 3-ம் திகதிகளில் திருகோணமலை முத்துக்குமார சுவாமி ஆலய முன்றலில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்கென சென்னை பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ. இம்மாதம் 29-ந் திகதி கொழும்பு வருகிறார். விழாவில் பண்ணிசை வழங்குவதற்காக திருப்பனந்தாள் மடம் சோ. முத்துக் கந்தசாமி தேசிகரும் வருகிறார்.

பேராசிரியர் ஞானசம்பந்தன் விழா முடிந்தபின் ஒரு வாரம் வரை கொழும்பிலும் பிற இடங்களிலும் விரிவுரை நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாற்றில் அறிவொளி பரப்பி நிற்கும் வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்



கப்பலோட்டிய தமிழன் வீரகத்திப்பிள்ளை

# தொண்டைமானாற்றில்

## அறிவொளிபரப்பும் ஒரு கல்விக்கோவில்

- எஸ். தங்கராசா -
( பழைய மாணவன்)

தொண்டைமானாற்றில் பிரபல வர்த்தகராகத் திகழ்ந்தவர் திரு. சி. வீரகத்திப்பிள்ளை. சமூகத்தின் முன்னேற்றங் கருதிப் பல துறைகளில் ஈடுபட்டு உழைத்தவர். ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' என்ற வள்ளுவர் வாக்கைத் தாரகமந்திரமாகக் கொண்டு பலருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் ஜீவனோபாயத்துக்கு வழிவகுத்தவர்.

யாழ்ப்பாணத்தில் செட்டிமார்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தகாலம். சிறுதோணிகளை ஸ்தாபித்துத் திரைகடலோடிய திரு. வீரகத்திப்பிள்ளை, ப. மு. சோ. ம., பி. கு. நா., அரு. அரு. சோம என்ற செட்டிமார்களுடன் சேர்ந்து பெருந்தோணிகளையும், பாய்க்கப்பல்களையும் பங்காகவும் சொந்தமாகவும் வல்வெட்டித்துறையில் நன்கு கைதேர்ந்த திரு.ச. செல்லத்துரைசாமி, திரு. சின்னத்தம்பி ஆகிய மேத்திரிமாரைக் கொண்டு கட்டுவித்து அவற்றில் பலருக்கு வேலைகொடுத்தார் அமீது, நித்தியானந்த கல்யாணி, சிவசுப்பிரமணிய புரவி, வள்ளிநாயகி, கோக்க நாடா, பேரானந்தவல்லி, ஆதிபூரணி, தெய்வநாயகி என்பன அவர்கட்டுவித்த கப்பல்களாகும். சுப்பிரமணிய புரவி போன்ற பெரிய பாய்க்கப்பல் இலங்கையிலோ இந்தியாவிலோ இருந்ததில்லை. இக்கப்பல்கள் பர்மாவில்: அரிக்கன், றங்கூன், மோல்மின் முதலிய துறைமுகங்களிலிருந்து, நெல், அரிசி, தேக்கு மரம், தவிடு முதலியவற்றைச் சொந்தத்தில் ஏற்றிவந்து யாழ்ப்பாணத்துத் துறைமுகங்களான ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் முதலிய துறைமுகங்களில் இறக்கின. தூத்துக்குடி, கலிக்கற்முதலிய துறைமுகங்களிலிருந்து ஓடுகளையும் ஏற்றி வந்தன. மலையாளம் புகையிலை, உப்பு என்பவற்றை இங்கிருந்து ஏற்றி இந்தியத் துறைகளில் இறக்கின.

அக்காலத்தில் இக்கப்பல்கள் காப்புறுதி செய்யப்படாதபடியால், இவற்றில் ஏற்றப்பட்ட சரக்குகள் புயல்காற்றின் அபாயத்தில் கடலில் வீசப்பட்டபோதும், சில சமயங்களில் ஆழ்கடலில் சரக்குடனும் மாலுமிகளுடனும் அமிழ்ந்தபோதும் எவ்வித நஷ்டஈட்டையும் பெறுத நிலை ஏற்பட்டது. ஆனால் இருபது கப்பலோட்டிகளுடன் 'வள்ளிநாயகி' என்னும் கப்பல் சமுத்திரத்தில் ஆழ்ந்தபோது மரிப்பிட்ட மாலுமிகளின் குடும்பத்தாருக்குப்போதிய சன்மானம் வழங்கினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கல்வித்தானச் சிந்தனை

கப்பலோட்டிய திரு. வீரகத்திப்பிள்ளைக்கு-

''இன்னறுங்கனிச்
சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண்
சுனைக ளியற்றல்
அன்ன சத்திரம்
ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினுயிரம்
நாட்டல்
பின்னருள்ள தருமங்கள்
யாவும்
பெயர் விளங்கி ஒளிர
நிறுத்தல்
அன்ன யாவினும்
புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக்
கெழுத்தறிவித்தல்


என்னும் பாரதி பாடலைக் கருத்திற்கொண்டு, தன் கிராமத்திலும். அதைச் சூழவுள்ள கிராமங்களிலுமுள்ள வறிய பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டவேண்டுமென்ற எண்ணம் உதயமானது. ஆகவே 1912ம் ஆண்டில் தனது சகோதரரும், மலாயா ஓய்வூதியம் பெற்றவருமான திரு. சி. இராமசாமி வீட்டில் இருபது பிள்ளைகளுடள் அல்வாயூரைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை உபாத்தியாயரின் பொறுப்பில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியரின் வேதனமும் பிள்ளைகளுக்குத் தேவையான உபகரணங்களும் அவராலேயே உதவப்பட்டன. மாணவர் படிப்படியாகக் கூடிக்கொண்டு வந்தனர். இரு வருடங்களின் பின் பிள்ளைகளின் தொகை அதிகரிக்கவே 1914ம் ஆண்டில் தொண்டைமானாறு பருத்தியடைப்பு என்னும் காணிக்குள் ஒரு கட்டடம் அமைத்து. திரு. மாணிக்கம் உபாத்தியாயரைத் தலைமையாசிரியராகவும், வேறு ஒரு ஆசிரியர்களை உதவி ஆசிரியர்களாகவும் நியமித்துத் தானே முழுச் செலவினங்களையும் பொறுப்பேற்று நடாத்திவந்தார்.

### ஆங்கிலப் பாடசாலை

அக்காலத்தில் கல்விப் போதனை மிஷனரிமாரின் ஏகபோக உரிமையாய் இருந்ததினலும் அரசாங்கத்தின் உதவி அவர்களுக்கு இருந்ததினலும், இவருடைய பாடசாலைக்கு அரசினர் நன்கொடை பெற முடியாமற் போய்விட்டது. அவர் மனம்தளராது ஆசிரியருக்குரிய வேதனம் ஒழுங்காகக் கொடுத்தும், பாடசாலையைத் தேவையான பொருட்களைக் குறைவுபடாது வழங்கியும் பாடசாலையைத் திறம்பட நடாத்திவந்தார். அக்காலத்தில் ஆங்கில அறிவு அரசாங்க உத்தியோகங்களுக்குத் திறவுகோலாக இருந்தமையால், ஆங்கிலம் கற்கவேண்டுமென்ற மோகம் அதிகமாக எல்லோரிடமும் ஏற்பட்டது. இதனல் பெரும்பான்மையான பெற்றோர் மிஷனரிமாரின் முகாமையிலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பத் தலைப்பட்டனர். வசதியற்றவர்கள் பெருமூச்சுடன் வாளாவிருந்தனர். இதனை அவதானித்த திரு. வீரகத்திப்பிள்ளை, பெரிதும் வேதனைப்பட்டார். இதற்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று திடசங்கற்பங் கொண்டார். 1917ம் ஆண்டில் தமது மகன் திரு. வீ. இராசரத்தினத்திற்காகக் கட்டப்பட்ட பெரிய கட்டிடத்தில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார். இவரது வேணவா நிறைவேறுவதற்கு உறுதுணையாக மிகவும் திறமையுள்ள திரு. எம். கார்த்திகேசு, தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். அவருக்கு உதவியாக அவர் விருப்பப்படி வேறு சில உதவி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர். எல்லோருக்கும் சிரமமாக மாதந்தோறும் வேதனம் வழங்கி வந்தார். மாணவர் தொகை அதிகரித்தது. அதனல் ஆசிரியர் தொகையும் கூடியது. அரசாங்கத்தின் உதவி பெறுவது துர்லபமாக இருந்தது. ஆகவே, முகாமையை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சபையிடம் ஒப்படைத்தார். அச்சபையின் போது முகாமையாளராக திரு. அ. சபாபதி இருந்தார். திரு. வீரகத்திப்பிள்ளை ஸ்தல முகாமையாளராக நியமிக்கப்பட்டார். பெயரளவில் முகாமைமாறியதேயன்றி பாடசாலையின் வரவு செலவு எல்லாவற்றையும் இவரே கவனித்துவந்தார். அடுத்த ஆண்டு திரு. சபாபதியின் தீவிர முயற்சியினல் பாடசாலை, அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாடசாலையும் நன்கு வளரத் தொடங்கியது. இதனல் இடவசதிக் குறைவு ஏற்படவே வேறும் புதிய கட்டிடங்களை நிர்மாணித்துக் கொடுத்தார். 1946ம் ஆண்டில் இந்துக் கல்லூரிச் சபையிலிருந்து விலகி இவரின் சகோதரரான திரு. சி. இராமசாமிப்பிள்ளையே முகாமையாளரானர். அதன் பின்னர் இவரது மகன் வீ. இராசரத்தினமும், அவரின் பின் அவரது மகன் திரு. இ. சிவகுமாரனும் முகாமையாளரானர்கள்.

பாடசாலையின் வளர்ச்சியைக் கண்டு மனம் பூரிப்படைந்த திரு. வீரகத்திப்பிள்ளை விசாலமான இடத்தில் பல வசதிகளும் கொண்ட பாடசாலையாக இதனை அமைக்க விரும்பினர். இவருடைய விருப்பத்துக்கேற்ப அயற்கிராமமாகிய கெருடாவிலிலுள்ள சில பெரியோர்களும் அதற்கு வேண்டிய நிலத்தின் ஒரு பகுதியை நன்கொடையாகக் கொடுத்து உதவினர். உடனே அந்நிலத்தில் பெரிய கட்டிடங்கள் அமைத்து வேறு பல வசதிகளையும் செய்து கொடுத்தார். மாணவர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. ஈ. எஸ். எல். ஸி. வகுப்புவரை கல்வி போதிக்கப்பட்டது. பாடசாலையின் வளர்ச்சியில் திரு. எம். கார்திகேசு தலைமையாசிரியரின் கடின உழைப்பு மறக்க முடியாதது. அவருக்கு வேண்டிய ஊக்கமும் ஆக்கமும் திரு. வீரகத்திப்பிள்ளையினல் வழங்கப்பட்டன. திரு. கார்த்திகேசுவைத் தொடர்ந்து சேவையிலீடுபட்ட தலைமையா

(5-ம் பக்கம் பார்க்க)



அமரர் வீரகத்திப்பிள்ளையினல் கட்டப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய கப்பலான சுப்பிரமணியபுரவியை இங்கு படத்தில் காண்கிறீர்கள். பர்மாவிலிருந்து 164 ருத்தலைக் கொண்ட 8500 நெல் மூடைகளை ஏற்றிவரும் தோற்றம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கோப்பாய்த் தொகுதியிலுள்ள

# 264 ஏக்கர் அரச காணியை

## நிலமற்றவர்களுக்கு வழங்குக”

### மாவட்ட அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

“கோப்பாய்த் தொகுதியில் தரிசு நிலமாகக் கிடக்கும் 264 ஏக்கர் முடிக்குரிய காணியை இத்தொகுதியில் வசிக்கும் நிலமற்ற மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க யாழ். மாவட்ட அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.”

மேற்கண்டவாறு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கோப்பாய்க் கிளையினர் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோனை யாழ். செயலகத்தில் சந்தித்துக் கையளித்த மகஜரில் வேண்டுகோள் விடப்பட்டிருந்தது.

அம்மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளதாவது:

வேம்பிராய் மாதிரிக் கிராம வேலைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

கடற்கரைப் பிரதேசமான தொண்டைமானாறு, அக்கரை, அச்சுவேலி வடக்கு, புத்தூர் கிழக்கு, புத்தர்கலட்டி ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் குடிநீர் இல்லாது கஷ்டப்படுவதால் அவ்விடங்களுக்குக் குழாய்நீர்த் திட்டம் ஆரம்பிக்கவேண்டும்.

65ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செல்வநாயகபுரம் குடியேற்றத்திட்டத்தில் மின்சாரம், பாடசாலை, மயானம் ஆகிய வசதிகள் இல்லாதிருப்பதால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். வீதிகளும் மிக மோசமாக இருக்கின்றன. இவைகளை நிவர்த்திசெய்து தரவேண்டும். தொழிலின்றிக் கஷ்டப்படும் செல்வநாயகபுரம் குடியேற்றவாசிகள் தோட்டம் செய்வதற்கு அப்பகுதியிலுள்ள முடிக்குரிய காணிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

கோப்பாய்த் தொகுதியில் உள்ள அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டையிலோ வேறு கைத் தொழிற்சாலைகளிலோ சிறுபான்மைத் தமிழர்களுக்குக் கூலிவேலையைத் தவிர உயர் பதவிகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அன்றியும் வேலை வங்கிப் படிவம் வழங்குவதில் இப்பகுதிச் சிறுபான்மைத் தமிழ்மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுபான்மைத் தமிழ்மக்கள் பெருந்தொகையாகக் கல்வி கற்கும் பாடசாலைகளில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்படவேண்டும்.

அங்கவீனர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் சகாயப் பணம் வழங்கவேண்டும்.

திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம். பி. ஏ. அன்ரனி, வ. நடராசா, இ. மயில்வாகனம், ம. செல்லத்தம்பு ஆகியோரைக் கொண்ட குழு, மாவட்ட அமைச்சரைச் சந்தித்தது. இப்பகுதிக்கு விரைவில் நேரில்சென்று பார்வையிட்டு ஆவன செய்வதாக அமைச்சர் இக்குழுவிடம் உறுதியளித்தார். (கொ-அ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

‘சமூக அநீதிகளுக்கு எதிரான அறவழிப் போராட்டம்’ என்ற தலைப்பிலான ஆய்வரங்கொன்றை அறவழிப் போராட்டக் குழு யாழ் மாநகர மண்டபத்தில் இன்று காலை நடத்துகிறது.

திரு. வி. சு. துரைராசா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் யாழ் மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி ஆய்வரங்கை ஆரம்பித்துவைப்பார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பொன். குமாரசாமி, செந்தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். கே. தர்மலிங்கம், யாழ் பல்கலைக்கழக மாணவர் மன்றத் தலைவர் திரு. செலவின், வண பிதா ஜெயசீலன். திருமதி வேதவயலி கந்தையா, திரு. ஈழவேந்தன் ஆகியோரும் மற்றும் பலரும் இவ் ஆய்வரங்கில் பங்குபற்றி உரையாற்றுவர். (கொ)

அரசாங்கச்சொத்துதிருட்டு:

# மூவர் கைதாகினர்; காரும் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்குச் சொந்தமான 5000 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றதாகச் சந்தேகத்தின் பேரில் மூவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

களவாடப்பட்ட பொருட்களை ஏற்றிச் சென்ற காரையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் செம்மணியிலுள்ள அணைக்கட்டுவேலைக்குப்பாவிக்கப்பட்ட 5000ரூபா பெறுமதியான மரப்பலகைகள் மற்றும் உபகரணங்கள்களவாடப்பட்டுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இத்திருட்டுச் சம்பந்தமாகப் புலன்விசாரணையில் ஈடுபட்ட யாழ். பொலிசார் சந்தேகத்தின் பேரில் அரியாலையைச் சேர்ந்த வெலிச்சோல் மனோகரன், மூத்ததம்பி கிட்டு, கொழும்புத்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் அல்லது யப்பான் ஆகியோரைக் கைதுசெய்ததுடன் பொருட்களை ஏற்றிச் செல்வதற்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கார் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது மனோகரன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மற்றும் இருவரையும் றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இத்திருட்டுச் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொன்னையா தியாகராசா என்பவர் பொலிசாரால் தேடப்படுகிறார்.

யாழ். பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முனிதாசா, கான்ஸ்டபிள் பெரேரா ஆகியோர் இது சம்பந்தமாகப் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கோ)

## பொருளாதார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில்நிதிஅமைச்சரின் அறிக்கையின்மீது விவாதம் நடத்த வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்ததற்கு அரசின் பொருளாதாரக்கொள்கையை விமர்சிக்கவேண்டும் என்பது மாத்திரமல்ல நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள்படும் கஷ்டம் போன்றவற்றை இங்கு எடுத்துக்கூறுவதும் எம் நோக்கமாகும் என்றார்.

எமக்கு எதிராக சென்னை இந்து பத்திரிகை எழுதிய தலையங்கங்களை வேதவாக்காகக் கொண்டு இச்சபையில் வாசிக்கப்படுவது ஒரு வழக்கமாக இருந்துவருகின்றது, சமீபத்தில் இலங்கையின் பொருளாதார நிலைமைபற்றியும் ஒரு தலையங்கம்எழுதப்பட்டுள்ளது. அதனை நான் வேதவாக்காகக் கொள்ளப்போவதில்லை ஆனால் அதையும் இந்த அரசாங்க அமைச்சர்கள் வாசிக்கவேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வரவுசெலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதின் பின்னர் பலதடவைகள் பல பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் பெட்ரோலியப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டபோது எண்ணெய் உற்பத்தி நாடுகளே இதற்குப் பொறுப்பு என்று கூறப்பட்டது. அதேசமயம் சீனி, மா, பாண் போன்ற உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. சீமெந்து பாக்கட்டின் விலை 46 ரூபாவாக இருந்தது, அடுத்தநாள் 53 ரூபாவாக அதிகரித்தது. பிறகு 83 ரூபாவாக உயர்த்தப்பட்டது. பின்னர் 78 ரூபாவாக குறைக்கப்பட்டது. இதனால் வீடுகட்டுவதற்கு எண்ணியுள்ள மக்கள் ஒரு ஸ்திரமான திட்டத்தை வகுத்துக்கொள்ள முடியாமல் திண்டாட நேர்ந்தது. விலைவாசிகள் குறித்து ஸ்திரமான நிலையொன்றை அரசு மேற்கொள்ளவேண்டும். உலக நாடுகளில் பொருட்கள் விலையேறும்போது அதனைச் சமாளிக்கும்விதத்தில் வருமானம் அதிகரிக்கப்படுகின்றது. ஆனால் அம்மாதிரியான ஏற்பாடு ஒன்றும் இங்குஇல்லை அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் ஒரேநிலையில் 30 ஆண்டு காலமாகப்பேணப்பட்டுவந்தது. அதனை மாற்றி அமைக்க முயற்சி எடுக்கப்பட்டதினால் அரசாங்கங்களே வீழ்ச்சியுற்றுள்ளன என்று திரு. அமிர்தலிங்கம் எடுத்துக்கூறினார். (ம)

## சுழிபுரத்தில்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமையன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (அ

கிராம அபிவிருத்தி வேலைகள்:

# சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்”

(யாழ்ப்பாணம்)

“கிராம மக்களின் உயர்விலும், தாழ்விலும், சமபங்கு கொண்டு அவர்களின் வழிகாட்டியாகவும், அம்மக்களின் ஆசை, அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகவும் சனசமூக நிலையங்கள் விளங்க வேண்டும். கல்வி, கலர்ச்சாரம் போன்றதுறைகளில் மட்டும் கவனம் செலுத்துவதுடன் சனசமூகநிலையங்கள் நின்றுவிடாமல், இன்று வரழ் கைச் செலவின் பழுவைத்தாங்கமுடியாது தினசரி வாழ்க்கையை நடாத்த வழி தெரியாது திண்டாடும் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சரியான மார்க்கத்தைக்காட்டி வழிநடாத்திச் செல்வதற்கும் இளைஞர்கள் முன்வரவேண்டும். இதன் மூலம்தான் சனசமூக நிலையங்கள் திருப்திகரமாக மக்களுக்குத் தொண்டாற்ற முடியும்”

இவ்வாறு மட்டுவில் மோகனதாஸ் சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றிய திரு. எஸ். சந்தியாப்பிள்ளை கூறுனார். கூட்டம் மேற்படி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. சந்தியாப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“கிராம அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தித்திட்டமிடப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களைச் செயல்படுத்துவதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் யாவையும் முழுமையாக பயன்படுத்துவதுடன், இத்தகைய நோக்கங்களுக்காக மக்களை ஐக்கியப்படுத்துவதோடு விசேடமாக இளைஞர்களின் ஆக்கசக்தியை திட்டமிட்டுசரியான திசைநோக்கி வழிநடாத்தி செல்வதுடன் மக்களுக்கு சேவைசெய்யும் மனப்பாங்கையும் உருவாக்க வேண்டும். இதன்மூலம்தான் எதிர்காலத்தில் கிராமத்தையும், மக்களையும் முழுத்தேசத் [illegible] சமுதாயத்தை [illegible] வாக்கமுடியும்”.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. எஸ். சந்தியாப்பிள்ளை, செயலாளர்: திரு. கே. சுப்பையா, தனாதிகாரி: திரு. வே. கிருஷ்ணன், பொதுச்சபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர். [க]

## வட்டுக்கோட்டை

# அபிவிருத்தி வேலைகள் பற்றி நூல்வெளியிட எம்.பி. முடிவு

(பண்டத்தரிப்பு)

கடந்த இரண்டு ஆண்டுகளாக வட்டுக்கோட்டைத் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூல் ஒன்றை விரைவில் வெளியிடுவதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 1978, 1979-ம் ஆண்டுகளில் வட்டுக்கோட்டை தொகுதியின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் பற்றிய விபரங்களைப்பற்றியும், இரு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட மின்சார விநியோகத் திட்டங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், கிராம அபிவிருத்தி சங்கக் கட்டிடங்கள் ஆகியவை உட்பட பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் தொகுதி மக்கள் சகலரும் அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த புத்தகத்தில் இடம்பெற இருப்பதாக வட்டு எம். பி. இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (க)

## தொண்டமானாறு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர்கள் அவர் வகுத்த வழியைக் கடைப்பிடித்துப் பாடசாலையின் முன்னேற்றத்துக்கு அயராது உழைத்தார்கள். திரு கார்த்திகேசுவின் பின் திருவாளர்கள்; ஏ. சரணமுத்து, எஸ். பி. கிருஷ்ணமூர்த்திஐயா, எம். இராசேந்திரம், எஸ். நடராசா கே. தம்பிப்பிள்ளை ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி இப்பொழுது திரு. ச. சத்தியமூர்த்தி பதில் அதிபராகக் கடமையாற்றுகிறார். திரு. எம் இராசேந்திரம் காலத்தில் பாடசாலையின் தரம் உயர்த்தப்பட்டு க. பொ. த. (சாதாரணம்) வகுப்பு வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. இப்பொழுது புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுப் பாடசாலை மிகவும் கம்பீரமாகப் புதுப்பொலிவுடன் தோற்றமளிக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் காலந்தோறும் திரு. சி. வீரகத்திப்பிள்ளையின் நெருங்கிய உறவினர்கள் பாடசாலையின் அபிவிருத்தி கருதி வழங்கிய நன்கொடைகளைக் கருத்திற்கொள்ளுதல் நன்று. இவருடைய மகன் திரு. இராசசேகரம் ரூபா 10,000 செலவில் ஒரு விஞ்ஞான ஆய்வு கூடமும், 13 பரப்புக் காணியும் வழங்கியுள்ளார். பேரன் திரு. சி நடேசன் ரூபா 7,500 செலவில் ஒரு மரவேலைக்கூடம் அமைத்துக் கொடுத்துள்ளார். பேர்த்தி திருமதி கணபதிப்பிள்ளை ரூபா 50,000 செலவிட்டு ஒரு மனையியல் ஆய்வு கூடம் நிறுவியுள்ளார்.

கடந்த தைமாதம் 31ம் திகதி தொடக்கம் இவ்வித்தியாலயத்தை ‘வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்’ என்று வழங்குமாறு அரசாங்கம் தீர்மானித்து நடைமுறைப்படுத்தியது மிகவும் பொருத்தமானதும் வரவேற்கத்தக்கதுமாகும். இங்குள்ள நாம் அரசாங்கத்துக்கு நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

# பேசாலையில்

## பாணுக்கு மக்கள் தவிப்பு

(மன்னார்)

பேசாலையில் வாரத்தில் நாலு நாட்களுக்கு மட்டுமே பேக்கரிகளில் பாண் விநியோகிக்கப்படுகிறது. மிகுதி மூன்று நாட்களும் பேக்கரிகள் மூடப்பட்டிருக்கின்றன.

பேக்கரிகளுக்கு வழங்கப்படும் மா குறைவாகவே வழங்கப்படுகிறது. போதியளவு மா பேக்கரிகளுக்கு வழங்கப்படாததால் வாரத்தின் கடைசி மூன்று நாட்களுக்கும் பேக்கரிகளில் பாண் தயாரிப்பதில்லை.

இதனால் வாரத்தின் கடைசி மூன்று நாட்களும் பொது மக்கள் பாண் இன்றி காலை உணவிற்குப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீதித்துறையில் பலவற்றை கற்கும் மாணவனே நான்"

## அமைச்சர் நிஸங்கா கூறுகிறார்

(கொழும்பு)

"நீதியமைச்சில் என்னைச் சுற்றியுள்ளவர்களிடம் நீதித் துறையில் பலவற்றைக்கற்கும் மாணவனாகவே நான் இருக்கின்றேன்".

இவ்வாறு நீதியமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜயரத்ன நேற்றுக்காலை தமது அமைச்சுக்கு முதல் தடவையாக விஜயம் செய்தபோது ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

கடந்த 14ம்திகதி நீதியமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அமைச்சர் விஜயரத்ன நேற்று முதல் தடவையாக ஹல்ஸ்ரொப்பிலுள்ள நீதியமைச்சுக்குச் சென்றபோது ஊழியர்களால் வரவேற்கப்பட்டார்.

பிரதி நீதியமைச்சர் திரு. செல்ரன் ரணராஜா, நீதி அமைச்சின் செயலாளர் திரு. ஏ. எம். ஆர். பி. அத்தநாயக்கா, பிரதிக் கல்வியமைச்சர் ஆகியோரும் இவ்வரவேற்பில் கலந்து கொண்டனர்.

ஊழியர் மத்தியில் திரு. விஜயரத்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நீதிபரிபாலனத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம். நீதியை தாமதமின்றி வழங்குவதன் மூலம் வளக்காளிக்கு ஓரளவு உண்மையான சேவையை செய்யவேண்டும்.

கல்வித்துறையைப் போலல்லாது நீதித்துறை எனக்கு முற்றிலும் புதியது" என்று குறிப்பிட்டார். (கு)

## வாகனங்களை வேகமாக ஓட்டியவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் வேகமாக வாகனங்களை செலுத்தியதாக குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்குகளில், எதிரிகளுக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மேலதிக நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ். பரதன் என்பவர், வேகமாகக் காரை செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாயைச் சேர்ந்த வி. தர்மலிங்கம் வேகமாக லொறியைச் செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நீர்வேலியைச் சேர்ந்த வி. செல்வராசா என்பவர் வேகமாக காரை செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## கீரிமலை சிவநெறிக்கழக போட்டி முடிவுகள்

(காங்கேசன்துறை)

கீரிமலை சிவநெறிக் கழகம் நடத்திய நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. விபரம்;

**பாலர் பிரிவு - ஆண்கள் நாவன்மை:**

சி. முரளீதரன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சி. பகீரதன் தெல்லி. மகாஜன, ம. கஜன் தெல்லி. மகாஜன, ச, ராஜீகன் தெல்லி. இந்து சமய விருத்திச் சங்கம், சி. சுபசீலன் வட இந்து மகளிர் கல்லூரி, இ, இராசகம் தெல்லி. இ. ச. வி. சங்கம், ந. நகுலேந்திரன் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம், தி. குமணன் அளவெட்டி சதானந்த வித்தியாலயம்.

**பாலர் பிரிவு - பெண்கள் நாவன்மை:**

ப. யசோதா தெல்லிப்பழை யூனியன் க. வி., இ. பிரசந்தினி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நீ. சிவரஞ்சினி தெல்லி, மகாஜன, சு. வைதேவகி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, கு. வாசுகி தெல்லி. இ. ச. வி. சங்கம், ச, பாமதி தெல்லி. மகாஜன, ந. கிருஷ்ணவதனி பருத்தித்துறை மெதடிஸ் த உ. க. பாடசாலை.

**ஆரம்ப பிரிவு - ஆண்கள் நாவன்மை:**

ந.பாலகணேஷன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ச. மாணிக்கசுஜீந்திரன் வட இந்து மகளிர் கல்லூரி, அ. அன்பழகன் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், ச. கார்த்திகேசன் பருத்தித்துறை வ. இ. ம. கல்லூரி, ப. பரணீதரன் பருத்தித்துறை வ. இ. ம. கல்லூரி.

**ஆரம்ப பிரிவு - பெண்கள் நாவன்மை:**

ஜி. சிவப்பிரியா தெல்லி. மகாஜன, க. கிரிஜா தெல்லி. யூனியன் க. வி., க. இந்துமதி மயிலிட்டி வடக்கு கலைமகள் வி. சி. ரேவதி, தெல்லி, இ. ச. வி. சங்கம், இ. மைதிலி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, க. சித்திரா தெல்லி. இ. ச. வி. சங்கம், தி. திருத்தேவி இளவாலை கன்னியர் ம. ம. வி.

(இன்னும் வரும்)

## களுவாஞ்சிக்குடி சம்பவம்: மேலும் 5 சந்தேகநபர்கள் பொலிசில் சரண்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பத்மநாதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை சம்பந்தமாகத் தேடப்பட்டவர்களில் உழவு இயந்திர உரிமையாளர் உட்பட ஐந்து பேர் நேற்று மட்டக்களப்பு பொலிசாரிடம் சரணடைந்தனர்.

உழவு இயந்திர உரிமையாளர் அப்துல் மஜீத், குழந்தைவேல், பொன்னம்பலம், கனகராஜா, தேவாப்போடி ஆகிய சந்தேகநபர்களே நேற்று பொலிசாரிடம் சரணடைந்தவர்களாவர்.

இவர்களின் வாக்கு மூலத்தை பதிவு செய்த பின்னர் பொலிசார் சந்தேகநபர்களை மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. எஸ். சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தபொழுது அவர்களை அடுத்தமாதம் 3-ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி பணித்தார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தேடப்படும் முக்கிய நபரான பிரபல கேடி கந்தப்போடி தொடர்ந்தும் தலைமறைவாகவேயுள்ளார்.

## பரிசோதனைக் குளாய் வெடித்தது 15மாணவர் காயம்

(கோண்டாவில்)

பாடசாலை ஆய்வுகூடத்தில் பரிசோதனைக் குழாய் திடீரென வெடித்ததால் 15மாணவர்கள் காயம் அடைந்தார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பத்தாம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் விஞ்ஞான பாடத்திற்கான ஆய்வின்போது தவறுதலாகக் கலக்கப்பட்ட அமிலம் காரணமாக பரிசோதனைக் குழாய் வெடித்ததாம்.

இவ்வாறு காயம் அடைந்த 15 மாணவர்களும் உடனடியாக அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். (கு)

# சீன - இஸ்ரேலிய ராஜதந்திர உறவு?

பெய்ரூட், பெப். 22

சீனாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையே உறவுகள் ஏற்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன என்று 'அத்-துன்யா' ஏடு எழுதுகிறது.

"இரண்டு நாடுகளுக்கிடையிலும் பன்முக உறவுகளை விருத்திசெய்யும் நோக்குடன் வாஷிங்டனில் ரகசியமாக சீன, இஸ்ரேலிய ராஜதந்திரிகளுக்கிடையில் சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பு, பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் பற்றி இரு தரப்புக்கும் ஒருமித்த கருத்து இருப்பதை ஊர்ஜிதப்படுத்தியது. ஈரானில் சீன, இஸ்ரேலிய உளவு சேவை கூட்டாக [illegible] தும் இதை ஊர்[illegible]கிறது" என்று பெய்ரூட் பத்திரிகை எழுதியுள்ளது.

பீகிங் சார்பு கோஷ்டிகளுக்கு சீன உளவாளிகள் விசேஷ முக்கியத்துவம் கொடுத்தனர் என்று 'அல்-சிஃபாஹ் அல் - அரபி' ஏடு எழுதுகிறது. ஷாப்பூர் பக்தியார் பிரதமரானகாலத்தில், இஸ்ரேலிய "மொஸ்ஸத்" உளவு சேவையுடன் மாவோயிஸ்டுகள் சேர்ந்து ஆத்திரமூட்டும் செயல்களிலும் கொமெய்னி ஆதரவாளர்கள் அணியில் பிளவுகளை உண்டாக்குவதிலும் ஈடுபட்டனர் என்று மேற்படி ஏடு எழுதுகிறது.

விரைவிலேயே சீன - இஸ்ரேலிய ராஜதந்திரிகள் [illegible] மாற்றம் நடைபெறுவதற்கான [illegible] இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

## தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் அண்மையில் அமைக்கப்பட்ட தென்மராட்சி அபிவிருத்தி நிறுவன நிர்வாகிகள் பின்வருமாறு:

போஷகரும், இணைப்பொருளாளரும்: திரு. வீ. என். நவரத்தினம் எம். பி., தலைவர்: துணைவேந்தர் சு. வித்தியானந்தன், சிரேஷ்ட துணைத்தலைவர்: பேராசிரியர். டபிள்யூ. எல். ஜெயசிங்கம், துணைத் தலைவர்கள்: திரு. க. துரைராஜா, (உதவி அரச அதிபர்) திரு. எஸ். கே. திரவியநாயகம், (நகர பிதா) திரு. நா. பாலகிருஷ்னன், (பொருளியல்துறைத் தலைவர்) வண. கருணாகரன், ஜனாப். கே. ஏ. முகைதீன். பொதுச் செயலாளர்: திரு. சு. முருகவேள் (உதவி அரச அதிபர்) துணைச் செயலாளர்: திரு. க. ஜீவதாஸ். இணைப்பொருளாளர்: வண. க. ஜெயசிங்கம், ஆலோசகர்: திரு. செ. லோகநாதன் (முன்னாள் உலக வங்கி ஆலோசகர்) (கு)

## தொலைபேசித் தொடர்பில் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தபாற் கந்தோரில் தொலைபேசித் தொடர்புகளுக்காக காத்திருக்கும் மக்கள் மிகுந்த சிரமமடைந்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் தொலைபேசித் தொடர்புக்காக அங்கு செல்லும் பெருந்தொகையான மக்களுக்கு அங்குள்ள ஒரேயொரு தொலைபேசி மூலமே தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலையில் தபாலதிபர்கள் இருக்கின்றனராம். தொலைபேசி பாவனைக்கு இத்தபால் நிலையத்திற்குச் செல்லும் மக்கள் பலமணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாம். (ஞ)

## கோப்பாய் கிராமிய வங்கி

(நெல்லியடி)

கோப்பாய் கிராமிய வங்கி பொதுமக்களுக்கு அடைவு நகைகளை மீளளிக்கும் நோக்குடன் கடந்த செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது. பூரண இராணுவ பாதுகாப்புடன் இவ்வங்கி இயங்கியது.

மீளளிப்புத் திட்டத்தின் கீழ் உரும்பராய் கிராமிய வங்கியும் இவ்வாரம் திறக்கப்படவுள்ளது. (அ)

## கலைவிழா

(சரவணை)

புங்குடுதீவு - கலைப் பெருமன்றத்தின் 3வது ஆண்டுக் கலைவிழா அண்மையில் அம்பலவாணர் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமை தாங்கினார். (கு)

## ஐக்கிய விடுதலை முன்னணி

(அரியாலை)

ஒடுக்கப்பட்டோர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொது நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் வடபகுதியில் சமீப காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆலோசனை செய்யப்படவிருக்கிறது.

## ஒற்றை வழியில் வாகனம் செலுத்தினர்: ரூ. 100 அபராதம்

(யாழ்ப்பாணம்)

ஒற்றைவழி பாதையில், மோட்டார் சைக்கிலில் சென்றவருக்கு 100 ரூபா அபராதம் அல்லது 1 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேலதிக நீதிமன்றத்தில் நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கோப்பாயைச் சேர்ந்த பி. சிற்றம்பலம் மோட்டார்சைக்கிளில் ஒற்றை வழிப்பாதையில் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

## அமைச்சருக்குப் பாராட்டு

(யாழ்ப் ாணம்)

சைவ ஆலயங்களில் மிகவும் நீண்ட காலமாகக் கைக் கொள்ளப்பட்ட பலிகொடுக்கும் பழக்கத்தை முற்றாகத் தடுத்து நிறுத்த அதற்கான சட்டமொன்றைக் கொண்டு வந்த பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையைப் பாராட்டி அகில இலங்கைத்திருவள்ளுவர் மகாசபை பொதுச் செயலாளர் கடித மொன்றை அனுப்பியுள்ளார். (க)

## கிரிக்கட் போட்டி

(அரியாலை)

வடமாகாணத்தில் இரண்டு மாபெரும் கிரிக்கட் போட்டிகள் மார்ச் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றன.

யாழ்ப்பாணக்கல்லூரிக்கும்-யாழ். சென்ற். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையிலான 62வருடாந்தக் கிரிக்கட் போட்டி மார்ச் மாதம் 14-ம் 15-ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும், யாழ். மத்திய கல்லூரிக்கும் - யாழ். பரி. யோவான் கல்லூரிக்குமிடையிலான 83 வருடாந்தக் கிரிக்கட்போட்டிமார்ச் மாதம் 21-ம் 22-ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெறும். (கு)

## யாழ். லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகியுள்ளது.

இரு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் "ஏ" பிரிவில் சென்ற். மேரிஸ் விளையாட்டுக் கழகமும், யாழ். முஸ்லீம் விளையாட்டுக்கழகமும், சென்ற். அந்தனிஸ் விளையாட்டுக் கழகமும், பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் கலந்து கொள்கின்றன.

'பி' பிரிவில் சென்ற். மேரிஸ் விளையாட்டுக் கழகம், யுத்காமல் விளையாட்டுக்கழகம், தென்மராட்சி விளையாட்டுக் கழகம், சென்ற். நிக்கொலாய் இளைஞர் விளையாட்டுக்கழகம், ஈசன் நீக்கொலாய் விளையாட்டுக் கழகம் ஆகியன கலந்து கொள்கின்றன.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவராக வைத்தியகலாநிதி ஜே. சி. பி. பிலிப்ஸ்ம், பொதுச்செயலாளராக திரு. எம். டி. தம்பிராசாவும் பணியாற்றுகின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
A GUN IN HIS SOCK, A TIRE IRON IN HIS BELT AND NO BADGE. THE STORY OF EDDIE. THE BEST EX-COP IN THE BUSINESS
BADGE 373
(Adults only)
Coming Soon: CHINA TOWN
THAT MAN BOLT

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-3
நாகேஷ்-முத்துராமன்-ஜெயந்தி-சௌகார் ஜானகி சுந்தரராஜன் நடித்த
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
இயக்குநர் திலகம் K. பாலசந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு. நீண்டகால இடைவெளியின்பின் யாழ். நகரில் திரையிடப்படும் தரமான ஒப்பற்ற காவியம். நாகேஷின் நடிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கண்டு களியுங்கள்.

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்" இணையவேண்டிய அவசியத்தை விளக்கும் இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

REGAL JAFFNA. STARTING TODAY
Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
A THRILLER WITH A DIFFERENCE
RAY BROOKS, JENNY HANLEY in
"THE FLESH AND BLOOD SHOW"
SEX — COLOR — STRICTLY FOR ADULTS

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
எல்லாம் உனக்காக

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஸ்ரீபால சக றன்மெனிக்கா

இன்று மட்டும்
லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
தெய்வ மகன்

SHANTHI JAFFNA. Phone: 7642.
Daily 10-30, 2-30, 4-45, 7 & 9-30 p.m.
The Story of the Police Elite,—
"THE SEVEN-UPS"- The Dirty - Tricks Squad. That even the Regular cops are afraid of!
"THE SEVEN-UPS"
Color
"ACTION" Never seen before on a Jaffna Screen!
Coming: WATCH OUT, WE'RE MAD! —Color—

# இன்றைய பலன்

மாசிமாதம் 11-ம் திகதி
(23-2-80)
சனிக்கிழமை

மேடம்: சிறுதவறு பெரிய நெருக்கடி உருவாக்கும். வியாபாரிகளாயின் புதிய முதலீட்டைத் தவிர்க்கவும். சஞ்சலமான செய்திக்குமிடமுண்டு.

இடபம்: பிறரின் தலையீடு உங்களுக்கு வேதனை தரலாம். வாழ்க்கையில் சோர்வுக்குமிடமுண்டு. உஷாராக இருக்கவும்.

மிதுனம்: வெளியூர் நண்பர்களால் மகிழ்ச்சியடைவீர்கள். குடும்பத்தில் சிறியபூசலும் இடம்பெறலாம். பொறுமையை நாடவும்.

சிங்கம்: பந்தபாசம் பரவசப்படுத்தும். உற்சாகமான வரவேற்பும் கிடைக்கும். இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்.

கன்னி: ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். புதிய முதலீடுகள் வெற்றியைத் தரும். கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

துலாம்: பொருளாதாரத் துறையில் நெருக்கடி ஏற்படும். மின்னிய பொறியியல் பகுதியில் கடமை புரிவோர் கவனம் வேண்டும். எதிலும் முன்னெச்சரிக்கை நன்று.

விருச்சிகம்: களஸ்திரவழியால் தனமும் சேரும். புதிய நண்பர்களின் ஆதரவும்கிடைக்கும். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்.

தனுசு: சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். வீண் செலவுகளைக் கட்டுப்படுத்தரும்.

மகரம்: பெரியோர்கள் சகவாசத்தால் மதிப்பு உயரும். உற்சாகம் பெருகும். தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்.

கும்பம்: அன்புக்கரங்கள் அணைக்கும். அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். இடப்பிரிவுமுண்டு. இல்லத்தில் இனிமையுண்டு.

மீனம்: மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும். தொழில் துறையில் முன்னேற்றமுண்டு. முதலீடு செய்வதற்கு உகந்த நாள்.

திருமலை
க. வேலுப்பிள்ளை
56/14, ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

## மேடையேறுகிறது

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை இளவாலை கொன்வென்ற் கல்லூரியில் இலங்கை நாடக அரங்கக் கல்லூரியினரின் தயாரிப்பான "பொறுத்தது போதும்" நாடகம் மேடையேறுகிறது.

(நா)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-4
கமலஹாசன்-சுஜாதா
உயர்ந்தவர்கள்

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஞ்சன்-T. R. ராஜகுமாரி
நடித்த
சந்திரலேகா
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
வீரப்பா-அஞ்சலிதேவி
நம்பியார்
நாக தேவதை
(புதிய பிரதி)

# "மக்களின் வாழ்க்கையுடன் கூட்டுறவுத்துறை இணைந்துவிட்டது"

(புலோலி)

"கூட்டுறவுத்துறை இன்று பொதுமக்களின் வாழ்க்கையொடு ஒன்றிணைந்துள்ளது இதனாலேயே கூட்டுறவு இயக்கம் துரித வளர்ச்சி அடைந்து வருவதுடன் அரசாங்கமும் கூட்டுறவுத் துறையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது."

இவ்வாறு, பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் நடைபெற்ற கூட்டுறவுக் கல்வி வேலைத் திட்டம் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் குறிப்பிட்டார். பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. துரைராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

"கூட்டுறவு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்படும் போது, பொது மக்கள் சிறந்த நன்மைகளைப் பெற முடியும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளைப் பொறுத்தவரையில் கிளைக்குழுக்களின் நிர்வாகச் சிறப்பிலேயே அக்கிளைகளின் அபிவிருத்தி தங்கியுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு கிளைக்குழுவினர் இயங்கி வந்தால் கிளைகள் அபிவிருத்தியடைவதுடன் பொது மக்களும் போதிய நன்மைகளைப் பெற முடியும்" என்றார்.

யாழ். கூட்டுறவுக் கல்வி அதிகாரி திரு. பத்திநாதனும் கருத்துரைகளை வழங்கினார். இக் கருத்தரங்கில் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கக் கிளைகளின் தலைவர்களும், செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# மடத்துவளவு கிராமத்தில் சுயஉதவி வீடமைப்புத்திட்டம்

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலுள்ள மடத்துவளவு என்னும் கிராமத்தில் சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 44 வீடுகள் யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகாரசபையினால் நிறுவப்படவுள்ளது.

இதற்கான கட்டிடவேலைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்திற்கு குழாய் நீர்விநியோகத்திட்டத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பி. திரு. தா. திருநாவுக்கரசு 50 ஆயிரம் ரூபாவை இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளார்.

## திருமுறைச் செல்வன் திருநாவுக்கரசு

ஆனி மாதம் புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை ஐயங்கரனுக்கு மஹோற்சவகாலம். இறைவன் பகல் விழாவுக்கு எழுந்தருளுகின்றான்: மங்கள வாத்தியங்கள்முழங்குகின்றன. அடியார்கள் தேவாரம் பண்ணிசையைப் பாடுகின்றனர். சர்வ அலங்காரத்தோடு இறைவன் வலம் வந்து யாகசாலையின் முன் நிற்கின்றான். திருமுறைச் செல்வன் திருநாவுக்கரசு தேவாரம் ஒத ஆயத்தமாகின்றார். ஓடிவந்து ஓரன்பர் அவர் காதில் ஏதோ சொல்கின்றார். அவர் மெய்மறந்து திருத்தாண்டகம் பாடுகின்றார். "மணிரங்" ராகத்தில் பாட்டை ரசித்த அடியார்கள் பரவசமடைகின்றனர். வாத்தியக்காரர்கள் மேலே பார்க்கின்றனர். இறைவனும் மகிழ்ந்தான் போலும்.

அமரரே,
உன்னிசை கேட்கும் இறையும், அருள்பெறும் அன்பர்களும்
நல்லோசையே கேட்டு நாவண்ணி நாளும் நலிந்து நிற்பர்
சொல்லோசையோடு உன் னிசை சேர்க்கும் நல் நாவரசு
மெல்லோசையேயன்றி ஈர்க்கா எமதிரு காதுகளே
ஆயாக்கடவை யருள்பொழியுமைங்கரனே
காயம் பூக்கண்ணன் நாதலனே ஓயாது
பண்ணிசைத்த அரசனவன் பரம்பொருளின் பதிநாடி
விண்ணுலகோ சென்றான் விரைந்
சந்நிதியில் உன்னிசையைச் சந்ததமும் கேட்டவர்கள்
எந்நியம் பெற்றிடுவார் இன்று
தொழுதகை துன்பம்துடைப்பான்
நாவினாலுனை நாடொறும் பாடுவார்
நாடுவர்தமை நண்ணிப் பழவும் - செய்வோம்
- லலிதபுரிச் சங்கம்
புன்னாலைக்கட்டுவன்

## பட்டினசபையின் புலமைப்பரிசு

(உடுப்பிட்டி)

நெல்லியடி பட்டின சபைப் பகுதியைச் சேர்ந்த பல்கலைக் கழகத்தில் பயிலும் இரு மாணவர்களுக்கு நெல்லியடி பட்டின சபைப் புலமைப் பரிசில் கிடைத்துள்ளது.

மாலிசந்தியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கும் நெல்லியடியைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் இப்புலமைப் பரிசில் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவர்களுக்கு தலா 500 ரூபா பெறுமதியான காசோலைகளை நெல்லியடிப் பட்டினசபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் வழங்கியுள்ளார்.

## கல்வி வட்டார விளையாட்டுப் போட்டி

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை வட்டார விளையாட்டுப் போட்டி மார்ச் மாதம் 18ம், 19ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ்வட்டார முதலாம் பருவப் பரீட்சை அடுத்த மாதம் 21ம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## குற்ற...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பு சிறப்பாக இருந்ததால் நாங்கள் அதைக் கண்டுபிடிக்க உதவியாக இருந்தது. கிராமங்கள் தோறும் விழிப்புக்குழுக்களை அமைக்கும் திட்டத்திற்கமைய புலோலி கிராமத்தில் இளைஞர்களைக் கொண்ட விளிப்புக் குழு ஒன்றைத் தெரிவு செய்துள்ளேன் பொதுமக்களின் எந்தவிதமான முறைபாடுகளையும் எதுவித அச்சமுமின்றி என்னிடம் தெரிவித்தால் அதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள நான் தயாராக உள்ளேன் என்றார்.

இதனையடுத்து பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவின் தலைவராக பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேலும் செயலாளராக திரு. எஸ். நந்தகோபாலும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் டாக்டர் பாலகிருஷ்ணன் சட்டத்தரணி ஸ்ரீசிவாயா திரு. என் பாஸ்கரன் திரு. கே. பொன்னம்பலம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**

SPECIALIST IN WATCHREPARING

யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...



டில்கா வாச் வேக்ஸ்

. பஸ் நிலைய எதிர் சேல்மாடி .

404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



ஈழநாடு The EELANAADU 50 சதம்


## உலகின் மிகப் பெரிய கால்வாய்

(மாஸ்கோ)

உலகிலேயே மிகப் பெரிய நீர்ப்பாசனக் கால்வாய்மத்திய ஆசியாவில்நிர்மாணிக்கப்பட்டு வருகிறது சாரா-கும் பாலை வனத்துக் கூடாகச் செல்லும் இந்த நீர்வழி 1,100 கிலோ மீட்டர் நீளமுடையது. ஏற்கனவே 1000 கிலோ மீட்டர்களைத் தாண்டிவிட்ட இக் கால்வாய் கஸ்பியன்கடலுடன் இணைந்திருக்கிறது.

பருத்திச் செய்கைக்காக மிக அகன்ற பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனமளிக்கும் இக்கால்வாயினூடே கஸ்பியன் கடல்கருங்கடல்,மத்திய தரைக் கடல். பால்டிக் கடல்ஆகிய வற்றுக்கு கப்பல் படகுச் சேவையும் நடைபெறவுள்ளது.





றிக்கோவுக்கு வேறு கிளைகள் இல்லை


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**செல்வன் ஐயாத்துரை சிவஞானச்சந்திரன்**

(பங்காளர்: குகானந்தபவான், தட்டாதெருச் சந்தி.)

தோற்றம்: 8 3 1963 மறைவு: 5-3-1979



எங்கள் அன்புத் தெய்வம் எம்முடன் வாழ்ந்ததை ஒரு பொற்கனவாக்கி விட்டு மீளாத் துயில் கொண்டுவிட்டார். பொறுமையின் இருப்பிடமாகிய சந்திரனின் ஆன்மா திருக்கேதீச்சரத்தானின் பாதாரக் கமலத்தில் சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
23-2-80.

அன்புத்தந்தை, தாய்
சகோதர, சகோதரிகள்
மைத்துனர்கள், உறவினர்கள்
நண்பர்கள்

5031

## யாழ். நகரில் இன்று ஜி. ஜி. நினைவுதினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி நடாத்தும் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் நினைவு தினக் கூட்டம் இன்று மாலை யாழ் நகரமண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நினைவுதினக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் உட்பட வடபகுதி எம்பிக்களும் யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. எம். ஆலாலசுந்தரம், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள்' இளைஞர் பேரவையினர், மகளிர் பேரவையினரும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (கொ-இ)

## தெய்வீக ஒளிச்சங்க ஆலி. இணைப்பளர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

குருமகராஜ்ஜியின் மகாத்மாக்களுள் ஒருவரும் தெய்வீக ஒளிச்சங்க அவுஸ்திரேலிய இணைப்பர்ளருமான விக்மாஷ், அருளுரை நிகழ்த்தும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பகவான் - இராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு, முகம்மது மற்றும்அவதாரபுருஷர்கள் உணர்த்திய அதே ஞான அறிவை உணர்த்தி இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் சற்குரு — குருமகராஜ்ஜியிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கும் விக்மாஷ் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மகாத்மா அருளுரை நிகழ்த்துவார்.

கடந்த 17-ம் திகதி கொழும்புக்கு வந்த இவர் மகாத்மாக்களை ஊக்கப்படுத்தும் நோக்குடனேயே இங்கு வந்துள்ளார்.

மற்றுமொரு மகாத்மா இம் மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறுர். (கு)

## ரியூட்டரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்துறை நீதிபதி திரு. ஜே. ஞானச்சந்திரன், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரகுணசேகரா உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி கனகசபாபதி ஆகியோர் ஸ்தல விசாரணை நடத்தினர்கள்.

சடலம் யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இன்று மரணவிசாரணை நடைபெறும். (இ)


**The Windmill**

Wind is a gift of
nature.
It is free.
Please
use it.



## வடஇலங்கை மக்களுக்கோர் வரப்பிரசாதம்!

எரிபொருள் விலையேற்றத்தால் விவசாயம் பாதிப்புறுதிருக்க இன்றே காற்றுடி ஆலை நீரிறைக்கும் இயந்திரத்தைப் பொருத்துங்கள்.

யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக காற்றுடி ஆலை நீர் இறைக்கும் கருவிகளை நாமே நிர்மாணம் செய்து அமைத்துக் கொடுக்கின்றோம்......

உங்கள் இல்லங்களை வர்ண உலகுக்கு அழைத்துச் செல்லும், சகலபெயின்ற் வகைகளுக்கும் எம்மை நாடுங்கள்.




பெருமளவில் விற்பனையாகின்றன

**HAMILTON BICYCLE RS. 800-00**

(INDIAN ASSEMBLES)

வர்த்தக விசாரணைகள்:

# சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்.

206, 208, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம். ஹலோ: 462



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கே.கே.எஸ் வீதியில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office ... No GP 8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org